**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.162** **நாள் : 24.05.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மழையினால் ஏற்படும் மழைநீர்த் தேக்கத்தை தவிர்த்து மழைநீரைச் சேமித்திடும் வகையில், குளங்கள் மற்றும் ஏரிகளில் பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில், பருவ மழைக் காலங்களில் குடியிருப்புப் பகுதி மற்றும் பொதுமக்களை வெள்ள பாதிப்பிலிருந்து பாதுகாத்திடும் வகையில், மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆறுகள், நீர் வழிக் கால்வாய்கள், குளங்கள் மற்றும் ஏரிகளில் தூர்வாருதல், கரைகளைப் பலப்படுத்துதல், தடுப்புச் சுவர் கட்டுதல், தடுப்புச் சுவர் உயர்த்திக் கட்டுதல் உள்ளிட்ட பல்வேறு வெள்ளத்தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், போதிய அளவில் மழைநீர் வடிகால்கள் மற்றும் வண்டல் வடிகட்டித் தொட்டிகள் அமைத்தல், பருவமழையின்போது மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் மழைநீர் தேங்குவதைத் தடுத்து, மழைநீரைச் சேமித்திடும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் விளையாட்டு மைதானங்கள் பூங்காக்கள் மற்றும் பொது இடங்களில் ஜெர்மன் தொழில்நுட்பத்தில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

குளங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி அதன் கொள்ளளவை அதிகரிக்கும் பணிகளையும் மக்கள் பயன்படுத்தும் வகையில் குளத்தினைச் சுற்றி புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல், பூங்காக்களில் மழைநீர் உறிஞ்சும் பூங்காக்களுக்கான கட்டமைப்புகளை உருவாக்குதல், புதிதாக குளங்கள் அமைத்தல் உள்ளிட்ட பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, மாதவரம் மண்டலம், வார்டு-27க்குட்பட்ட மாதவரம் ஆவின் குட்டையில் ரூபாய் 59 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைத்தல் மற்றும் பல்வேறு மேம்பாட்டுப் பணிகளும், வார்டு-25க்குட்பட்ட பாண்டா குளத்தில் ரூபாய் 91.60 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைத்தல் மற்றும் மேம்பாட்டுப் பணிகளும், அம்பத்தூர் மண்டலம், வார்டு-85க்குட்பட்ட, மங்களபுரம் குளத்தில் ரூபாய் 182 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைத்தல் மற்றும் மேம்பாட்டுப் பணிகளும், பெருங்குடி மண்டலம், வார்டு-191க்குட்பட்ட, ஜலாவுதீன் பேட்டை, வண்ணான் குட்டை குளத்தில் ரூபாய் 356 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைத்தல் பணிகளும், மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் காரணமாக பருவமழைக் காலங்களில் இந்த குளங்களில் அதிக அளவில் மழைநீரைச் சேமித்து சாலையில் மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் மழைநீர்த் தேக்கத்தை தவிர்ப்பதற்கும், மழைநீரை நிலத்தடியில் சேமிப்பதற்கும் மிகச் சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, மக்கள் நலன் பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**